முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1272

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

24.03.2023, வெள்ளிக்கிழமை

1. உலகோர் பசிபிணி விரட்டி
ஓங்கார ஞானம் இனிதே உபதேசித்து
உலகமெல்லாம் ஞானவான்கள் படைபெருக
உயிர்கொலை நீக்கும் மகா தத்துவத்தை அருளுகின்ற
2. அருளுகின்ற அரங்கனே ஞானியே
ஐயனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
வரமென ஞான அறிவுரை ஆசி
வழங்குவேன் சுபகிருது சேல் திங்கள் தன்னில்
(சுபகிருது வருடம் பங்குனி மாதம் 10 ம் நாள், 24.03.2023, வெள்ளிக்கிழமை)
3. தன்னிலே அரங்கன் தர்மத்தைக் கொண்டு
தரணியெங்கும் அற்புதம் நடக்க இருக்க
மண்ணுலகில் அரங்கனின் தர்ம ஞானக் கொள்கையை
மகத்துவம்பட உலகோர் ஏற்று பரப்பி வந்தால் போதும்
4. போதுமப்பா உலகமெல்லாம் மாற்றம்
புண்ணியவழிகளை கொண்டே மாறி
ஆதரவாய் உலகோரெல்லாம் தர்மவான் ஞானவான் எனும்
அடையாளம் புதுமைபட கொண்டு இனிதே
5. தடையற உலகை மாற்றும்
தக்க ஞான சக்திகளாக மாற்றம் பெறுவர்
சோடையிலா அரங்கன் உபதேச வரமும் தீட்சையும்
சுத்தநெறிவழி உலகையே மாற்றி
6. மாற்றியே உலகம் ஞானலோகமாக
மக்களைக் காக்கின்ற மகான்களின் ஆட்சிக்காலமாக
தேக்கமின்றி இனிதே மாற்றம் காணும்
தெய்வநெறிபட இந்த உலகமே பெரும் பாதுகாப்பைப் பெறும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–